# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No. 14 of 2020
Prosecution Witness No.1 (L.W.1 )

| | | | |
|---|---|---|---|
| Name | : Suman | Caste | : S.C. |
| Father's Name | : மசிலமணி | Calling | : கூலி |
| Village | : குடியாத்தம் | Religion | : இந்து |
| Taluk | : குடியாத்தம் | Age | : 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16.12.2024.

(Accused 1, 2 present)

எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி வழக்கறிஞர் திரு.அருண்குமார் ஆஜர். 2ம் எதிரி வழக்கறிஞர் திரு.மதன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. வழக்கு விசாரணைக்காக இன்று பட்டியல் இடப்பட்டது. அரசு தரப்பில் 6 சாட்சிகள் விசாரணைக்கு வந்துள்ளதாக சொன்னார்கள். வழக்கின் நடைமுறையில் சாட்சிகள் ஆஜரான நிலையில் எதிரிகளிடம், சாட்சிகளை விசாரிக்க போவதாக சொன்னதின் பேரில், 2ம் எதிரி ராஜா தன்னுடைய வழக்கறிஞர் ஆஜராகவில்லை என்று சொன்னார். சாட்சிகளை கீழ்க்கண்டவாறு விசாரிக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் மேற்படி விலாசத்தில் வசிக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும். 08.01.2019 ம்

தேதி என்னுடைய நண்பர் சூரியா (எ) உதயசூரியன், நான் வீட்டில் இருக்கும்போது சூரியா வந்து மது அருந்த என்னை கூப்பிட்டார். நானும், என்னுடைய நண்பர் சூரியா (எ) உதயசூரியனும் காந்திநகர் நியு பார்க் டவுன் ஒயின் ஷாப்பிற்கு சென்று ரம் வாங்கினோம். சூரியா உடைய இருசக்கர வாகனமான டி.வி.எஸ். எக்ஸ் எல் சூப்பர் எண்.TN–23–AU–5551 வண்டியை நான் ஓட்டிக்கொண்டு பின்னாடி சூரியா உட்கார்ந்து கொண்டு வந்தார்.

நான் மது குடித்த பின்னர் எனக்கு பசி எடுக்கவே மணி என்பவருடைய ராயல் என்பீல்டு வண்டியை எடுத்து வீட்டிற்கு வந்து சாப்பிட்டு விட்டு திரும்புவம் சூரியா இருக்கும் ஒயின் ஷாப்பிடம் சென்றேன். அந்த இடத்தில் மகேந்திரனும், ஸ்ரீகாந்தும் ஒயின் ஷாப்பிடம் இருந்தார்கள். அதன் அருகில் ஆஜர் எதிரிகள் ரமேஷ் மற்றும் ராஜாவும் இருந்தார்கள். சூரியா, மகேந்திரனை பார்த்து எதிரி ராஜாவிடம் போய் கூலியை கேளுடா, பெயிண்ட் அடித்த காசும், வெல்டிங் செய்த கூலி ரூ.4000/–த்தை உன் மச்சான சௌந்தரிடம் வாங்கி கொடுக்க கேளுடா என்று சூரியா, மகேந்திரனிடம் சொன்னார். மகேந்திரன் போய் ஆஜர் எதிரி ராஜாவிடம் கேட்டார்.

இரண்டு பேருக்கும் தகராறு நடந்து மகேந்திரன், ராஜாவை கன்னத்தின் மீது அடித்தார். அப்போது ராஜாவும், ரமேஷ்–ம் சண்டை போடாதீர்கள் என்று நான் போய் விலக்கி கூட்டி வந்துவிட்டேன். பிறகு சூரியாவை சூரியாவின் எக்ஸ் எல் 5551 வண்டியை நான் ஓட்டிக் கொண்டு சூரியா பின்னாடி உட்கார்ந்துக்கொண்டு வீட்டிற்கு வருவதற்கு வந்துவிட்டோம்.

ஆஜர் எதிரிகள் இரண்டு பேரும் என்னிடம் காட்டப்படும் ஸ்கூட்டி இசட் TN–23–CW–4766 என்ற வண்டியை ஆஜர் 2ம் எதிரி ஓட்டி வர முதல் எதிரி பின்னாடி உட்காந்திருந்தார். சக்திநகர் ஜங்ஷனில் தேவி என்பவர் வீட்டிற்கு எதிரில் ஆஜர் எதிரிகள் மேற்கண்ட இருசக்கர வாகனத்தில் எங்களுக்கு பின்னாடியே வந்து, ங்கோத்தா டேய் தேவிடியா பசங்களே நில்லுங்கடா என்று திட்டிக்கொண்டே விரட்டி வந்தார்கள்.

தேவி வீட்டினிடம் வரும்போது பின்னாடி வந்த எதிரி ரமேஷ் பின்னாடி உட்காந்துக்கொண்டு என் இருசக்கர வாகனத்தில் பின்னாடி உட்கார்ந்திருந்த சூரியாவை சட்டையை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டார். நானும், சூரியாவும் டி.விஎஸ் எக்ஸ் எல் இருந்து கீழே விழுந்தோம். ஆஜர் எதிரி ரமேஷ் இடுப்பில் வைத்திருந்த வெட்டுக் கத்தியை எடுத்து தேவிடியா பையா எங்கிட்டயே வந்து கூலி காசை கேட்கிறயா என்று சொல்லி என்னிடம் காட்டப்படும் வெட்டுக் கத்தியை எடுத்து சூரியா (எ) உதய சூரியன் தலையின் இடது பக்கம் ஓங்கி வெட்டிவிட்டார். உடனே அதே கத்தியை 2ம் எதிரி ராஜா வாங்கி, சூரியாவின் இடது தொடையில் இரண்டு வெட்டு வெட்டினார். பிறகு ஆஜர் முதல் எதிரி அதே கத்தியை வாங்கி சூரியாவின் இடது பக்க முகத்தின் ஓட்டி வெட்டினார். சூரியாவை முகத்தில் வெட்டியபிறகு இரத்த வெள்ளத்தில் கீழே சாய்ந்துவிட்டார்.

நான் தடுக்க முற்படும்போது என்னை முள் செடியில் பிடித்து தள்ளிவிட்டார்கள். நான் உடுத்தியிருந்த பச்சை கலர் டீ சர்ட் கிழிந்துவிட்டது. இந்த சம்பவம் நடந்துக் கொண்டிருக்கும்போது

மகேந்திரனும், ஸ்ரீகாந்தும், செல்வராஜ் வீட்டினிடம் வந்துக் கொண்டு இருந்தார்கள். பிறகு உடனடியாக ஆஜர் எதிரிகள் கத்தியுடன், வந்த இருசக்கர வாகனத்தில் வெளியே போய்விட்டார்கள். பிறகு மகேந்திரனும், ஸ்ரீகாந்தும், ஆஜர் எதிரிகளை பிடிப்பதற்கு விரட்டிக் கொண்டு போனார்கள். நான் உடனே மோனிஷ்க்கு போன் செய்து தகவல் சொன்னேன்.

இந்த சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது சம்பவ இடத்திற்கு எதிர் வீட்டில் இருந்த தேவி சம்பவத்தை பார்த்தார். 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொன்னார்கள். உடனே இரத்தம் அதிகமாகவே சூரியாவை ஆம்புல்ன்ஸ்சில் ஏற்றி குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். பிறகு மருத்துவர்கள் அங்கிருந்து உடனடியாக மேல் சிகிச்சைக்கு வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். அதன்பிறகு இரவு 7.15 மணிக்கு காயம்பட்ட சூரியா (எ) உதயசூரியன் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள்.

அதன்பிறகு நான் மற்றும் உறவினர்கள் காவல் நிலையம் சென்று அந்த இடத்தில் நான் சொல்ல சொல்ல உறவினர் ஒருவர் புகார் எழுதினார். அதில் நான் கையெழுத்து செய்தேன். அதை நான் காவல் நிலையத்தில் புகார் அ.சா.ஆ.1 கொடுத்தேன். மேற்படி எதரிகள் இருவரும் TN–23–CW–4766 Scooty Zest என்ற வாகனத்தில் வந்தார்கள். அது வழக்கு சொத்தாக உள்ளதை சாட்சி நீதிமன்றத்தில் அடையாளம் காட்டியதால் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நானும், சூரியாவும், சூரியாவுக்கு சொந்தமான டி.வி.எஸ். எக்ஸ் எல் சூப்பர் TN–23–AU–5551 என்ற வாகனத்தில் சென்றோம். அந்த வாகனம் வழக்கு சொத்தாக உள்ளதை சாட்சி நீதிமன்றத்தில் அடையாளம் காட்டியதால் சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சாட்சி சம்பவ காலத்தில் அணிந்திருந்த பச்சை கலர் டீ சர்ட் சாட்சி நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். அது சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவத்தில் எதிரிகள் பயன்படுத்திய வெட்டு கத்தி வழக்கு சொத்தாக உள்ளதை சாட்சி நீதிமன்றத்தில் பார்த்து அடையாளம் காட்டினார். அது சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (1 வது எதிரி தரப்பு வழக்கறிஞர் சா.பொ.4 ஐ பொறுத்து அது மூடி முத்திரையிடப்பட்ட உறையில் இல்லை என்பது பொறுத்து ஆட்சேபனையுடன் குறியீடு செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறே குறியீடப்பட்டது. அதை பொறுத்து இறுதி விசாரணையில் வாதுரைக்கலாம்) இவ்வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

உணவு இடைவேளைக்கு பிறகு, சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இறந்து போன சூரியா பறமேளம் அடிக்கும் வேலை செய்து வந்தார். அவர் ஒரு பட்டியல் இனத்தவர். நானும் பட்டியல் இனத்தவர்.

1, 2 எதிரிகள் இருவரும் பட்டியல் இனத்தவர் சேர்ந்தவர்கள் தான். எதிரிகள் நாங்கள் வசிக்கும் ஊருக்கு பக்கத்து ஊரில் வசித்தார்கள். எனக்கும், 1ம் எதிரிக்கும் நேரடியாக எந்த தொடர்பும் இல்லை.

புகாரில் மேலே எழுதப்பட்டுள்ள வாசகமும், கீழே எழுதப்பட்டுள்ள வாசகமும் ஒரே கையெழுத்தாக உள்ளது என்றால் சரிதான். புகாரில் முதல் பக்கத்தில் 5வது வரியில் நேரத்தை பொறுத்து கையால் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரை என் அண்ணன் தான் எழுதினார் என்று புகாரிலோ, போலிஸ் வாக்குமூலத்திலோ போலிசாரிடம் கொடுத்த மறுவாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். என் அண்ணன் தான் புகாரினை எழுதினார் என்று சொல்லி உள்ள நிலையில் அவருடைய பெயரை பற்றி புகாரிலோ, போலிசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து காவல் நிலையம் 2 கி.மீ. தொலைவில் உள்ளது. நான் வழக்கில் சொல்லிய ஒயின்ஷாப், குடியாத்தம் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டிடத்திற்கு பின்புறம் உள்ளது. ஒயின்ஷாப்பிலிருந்து, குடியாத்தம் நீதிமன்றம் சுமார் 500 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. சுற்றி வந்தால் ஒரு கி.மீ. தூரம் இருக்கும்.

சம்பவம் மாலை 5 மணிக்கு நடந்நததாக சொல்லி உள்ள நிலையில் காவல் நிலையத்தில் 8 மணிக்கு தான் புகார் கொடுத்தேன். என்னுடைய புகாரில் ஏன் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டது என்பது குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் புகாரில்

சொல்லவில்லை. ஆனால் நான் மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவர் அவர் இறந்துவிட்டார் என்று சொன்னபிறகு நான் புகார் கொடுத்தேன். மேற்படி மருத்துவமனைக்கு சென்ற பின்னர், சூரியா இறந்த பின்னர் புகார் கொடுத்தது குறித்து அந்த விஷயத்தை புகாரிலோ, போலிஸ் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

என்னுடைய புகாரில் சூரியா இறந்தது பற்றி அவருடைய தந்தை எனக்கு சொல்ல தெரியும் என்று தான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நானும், அவரும் குடியாத்தத்தில் இருந்தோம். காயம்பட்ட சூரியாவை வேலூர் அரசு மருத்துவமனைக்கு குடியாத்தம் மருத்துவர் அனுப்பி வைத்தார். வேலூருக்கு அவரை அனுப்பி வைத்தார் என்ற தகவல் தெரிந்தது.

சூரியாவை குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு எடுத்து சென்றபோது மருத்துவர், சூரியாவை பார்த்து அவரை அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல சொன்னார்கள். நான் சொன்னதை மருத்துவர் பதிந்து கொண்டார்கள். குடியாத்தம் அரசு மருத்துவமனையில் ஒரு காவலர் அங்கு இருப்பார் என்றால் ஆமாம். குடியாத்தம் அரசு மருத்துவமனையில் இருந்த போலிசார் சம்பவத்தை பொறுத்து என்னிடம் தகவல் வாங்கியிருப்பார் என்றால் சூரியாவின் வீட்டில் உள்ளவர்களிடம் கேட்க வேண்டும். சூரியாவை நான் மருத்துவமனையில் சேர்த்த பின்னர் நான் கிட்டே செல்லவில்லை. நான் செல்வதற்கு கால தாமதமாகிவிட்டது.

அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் ஒரு போலிஸ் பூத் உள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் அடிதடி வழக்கு என்ற நிலையில் அவர்கள் தகவல் கொடுத்து வழக்கு பதிவார்கள் என்றால் நான் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை. அதுப்பற்றி எனக்கு தெரியாது.

என்னுடைய புகாரில் ஸ்ரீகாந்த் என்பவர் எங்களுடன் இருந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அவர் ஒயின்ஷாப்பிற்கு வெளியே இருந்தார். மதியம் 1.30 மணியளவில் ஒயின்ஷாப்பில் இருந்து ராயல் என்பீல்டு வண்டியில் வீட்டிற்கு சென்றேன் என்ற சொல்லிய நிலையில் அந்த விவரத்தை என்னுடைய புகாரிலோ போலிஸ் வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் வண்டியில் சென்றதாக சொன்னேன். அந்த வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அது அப்போது தான் புதிய வண்டியாக எடுத்தார்கள். அது என்னுடைய மாமா வண்டி. அது பதிவு செய்யவில்லை. போலிசார் விசாரணையில் புதிய வண்டி என்றும், இன்னும் பதிவு செய்யவில்லை என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

ஒயின்ஷாப் மேற்கு திசையை நோக்கி உள்ளது. ஒயின்ஷாப் முன்பு தகர ஷீட் போட்டது போல் இருந்தன. உள்ளே என்ன மாதிரி கட்டிடம் என்று எனக்கு சரியாக தெரியாது. ஒயின் ஷாப்பின் பார் அட்டாட்ச்டு பார் உள்ளதா என்றால் உள்ளே ஒட்டியது போல் இரண்டு

கடைகள் உள்ளன. அது Bar–ரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து தேவியின் வீடு எந்த திசையை நோக்கி உள்ளது என்றால் தேவியின் வீடு வடக்கு பார்த்தாற் போல் உள்ளது என்று ஞாபகம். தேவி வீட்டின் வண்ணம் என்னவென்று எனக்கு தெரியாது. தேவி வீட்டு வரிசையில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் புங்க மரம் இருந்தது. சம்பவ இடத்தில் நான் இல்லை என்றும், அதனால் தான் சம்பவம் நடந்த இடத்தை பொறுத்து தேவியின் வீடு எந்த திசையில் உள்ளது என்று எனக்கு தெரியவில்லை என்றும், அதனால் நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

108 ஆம்புல்ன்ஸ்க்கு தொலைபேசி மூலம் தகவல் சொன்னோம் என்ற நிலையில் எந்த தொலைபேசியில் இருந்து தகவல் சொன்னோம் என்றால் மோனிஷ் என்பவர் அவருடைய தொலைபேசியில் இருந்து 108 ஆம்புல்ன்ஸ்க்கு தகவல் சொன்னார். தேவி என்பவரும் சம்பவத்தை பார்த்து 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொன்னார். மோனிஷ் என்பவர் தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மகேந்திரன், ஸ்ரீகாந்த், மணிகண்டன், மோனிஷ், ராஜேஷ், அதியமான் ஆகியோர்கள் இறந்து போன சூரியாவிற்கும், எனக்கும் நண்பர்கள் என்றும், எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

என்னுடைய புகாரில் TVS XL Super வண்டியை நான் ஓட்டி வந்த நிலையில் அந்த வண்டியின் பதிவு எண்ணை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரை எழுதிய நபர் வண்டியின் பதிவு எண்ணை என்னிடம் கேட்கவில்லை. புகாரில் நான் சொன்ன விவரத்தை தான் எழுதி எனக்கு படித்து காண்பித்தார்கள் என்று எந்த ஒரு குறிப்பும் இல்லை என்றால் சரிதான். தற்போது குறியிடப்பட்ட சா.பொ.2 வாகனத்தின் முன்புறத்தில் N.சரவணன் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது இறந்து போன சூரியாவின் சித்தப்பா பெயராகும்.

புகாரில் TVS XL Super வண்டி இறந்து போன சூரியாவின் சித்தப்பா வண்டி என புகாரிலோ, போலிஸ் வாக்குமூலத்திலோ, மறுவாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார், என்னை காவல் நிலையத்தில் ஒரு முறையும், சம்பவ இடத்தில் ஒருமுறையும் விசாரித்தார்கள். சம்பவ இடத்தில் நான் வாக்குமூலம் கொடுக்கவில்லை. போலிசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கியபோது கணிப்பொறியில் தட்டச்சு செய்தார்கள். என்னுடைய புகாரிலோ, போலிஸ் வாக்குமூலத்திலோ, மறுவாக்குமூலத்திலோ கத்தியின் நீளம், அகலம், நிறத்தை பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அந்த பதட்டத்தில் அதை நான் சொல்லவில்லை. போலிசார் என்னிடம் மறுவாக்குமூலத்தை எப்போது வாங்கினார்கள் என்றால் அதுமாதிரி எதையும் வாங்கவில்லை.

நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், சம்பவத்தை யார் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றாலும், அதனால் என்னுடைய புகார் மற்றும் வாக்குமூலத்தில் சான்று பொருள் நீளம், அகலம் பற்றி நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அப்போது சம்பவ நேரத்தில் எனக்கு பதட்டமாக இருந்தது. அப்போது போலிசார் கேட்டபோது நான் சொல்லவில்லை.

புகாரில், மகேந்திரனும், ஸ்ரீகாந்தும் சம்பவ இடத்திற்கு எந்த வாகனத்தில் வந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். காரணம் மகேந்திரன் குடிப்பதற்கு வந்தார். அவர் குடித்துக் கொண்டிருந்ததார். அப்போது சூரியா பேசிவிட்டு வந்தார். அதற்க பின்னர் தான் சம்பவம நடந்தது. எனவே நான் மகேந்திரன் வந்த வண்டியை நான் கவனிக்கவில்லை. மகேந்திரனும், ஸ்ரீகாந்தும், செல்வராஜ் வீட்டு பக்கமாக வந்ததாக சொல்லியுள்ள நிலையில் செல்வராஜ் வீடு எந்த திசையில் உள்ளது என்றால், மகேந்திரனும், ஸ்ரீகாந்தும் கிழக்கு பக்கம் இருந்து மேற்கு பக்கம் வ்நதார்கள். செல்வராஜ் வீட்டினிடம் வரும் போது சூரியாவிற்கு இவ்வாறு நடந்தது என்று நான் அவர்களிடம் சொன்னேன். செல்வராஜ் வீட்டை பற்றி என்னுடைய புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் மகேந்திரனும், ஸ்ரீகாந்தும், 1ம் எதிரியை பிடிக்க துரத்தி சென்றார்கள் என்று சொல்லவில்லை என்றால் நான் புகார் எழுதும்போது சொன்னேன். அதில் எழுதவில்லை.

நான் முள்செடியில் விழுந்து இருந்தால் சட்டை கிழந்து இரத்தம் வந்திருக்கும் என்றால் காலில் முள் குத்தியது. என்னுடைய சட்டை கிழிந்துவிட்டது. என் காலில் முள் குத்தியதற்காக மருத்துவரிடம் சொல்லி மருத்துவம் பார்த்தேனா என்றால் இல்லை. சா.பொ.3 டீ சர்ட் அதில் வலது கை பக்கம் தோள்பாகம் முழுமையாக கிழிந்துள்ளது. கீழே வலதுபுற இடுப்பு பகுதியும் கிழிந்துள்ளது என்றால் அதை பார்த்தால் அந்த பகுதி கட் செய்தார்போல் உள்ளது.

நான் சம்பவ இடத்தில் இருந்து இருந்தால் சா.பொ.3 ல் நான் முள்ளில் விழுந்து இருந்தால் கிழிசல் ஏற்பட்டிருக்கம் என்றால் சம்பவ இடத்தில் நான் இல்ரலாததால் இரத்தக்கறை இல்லை என்றால் சரியல்ல. சா.பொ.3 வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

நான் சம்பவ இடத்தில் இருந்து இருந்தால் உடனடியாக காவல் நிலையத்தில புகார் கொடுத்திருப்பேன் என்றும், சம்பவ இடத்திலட் நான் இல்லாததால் தான் சூரியாவின் தந்தை எனக்கு தகவல் கொடுத்தார் என்றும், அதன் பின்னர் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்ன சாட்சியம் போலிசார் சொல்லி சொன்ன பொய் சாட்சியம் என்றால் சரியல்ல. அதனால் தான் புகாருக்கும், முதல் விசாரணைக்கும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

2ம் எதிரி, சாட்சியை குறுக்கு விசாரண செய்ய தெரியாது என்று கூறுகிறார்.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2024.12.16 19:12:23 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No. 14 of 2020
Prosecution Witness No.2 (L.W.2 )

| | | | |
|---|---|---|---|
| Name | : Devi @ Sridevi | Caste | : S.C. |
| Father's Name | : M.ஆதிமூலம் | Calling | : B.S.N.L. |
| Village | : கொண்டசமுத்திரம் | Religion | : இந்து |
| Taluk | : குடியாத்தம் | Age | : 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16.12.2024.

(Accused 1, 2 present)

எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி வழக்கறிஞர் திரு.அருண்குமார் ஆஜர். 2ம் எதிரி வழக்கறிஞர் திரு.மதன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. வழக்கு விசாரணைக்காக இன்று பட்டியல் இடப்பட்டது. அரசு தரப்பில் 6 சாட்சிகள் விசாரணைக்கு வந்துள்ளதாக சொன்னார்கள். வழக்கின் நடைமுறையில் சாட்சிகள் ஆஜரான நிலையில் எதிரிகளிடம், சாட்சிகளை விசாரிக்க போவதாக சொன்னதின் பேரில், 2ம் எதிரி ராஜா தன்னுடைய வழக்கறிஞர் ஆஜராகவில்லை என்று சொன்னார். சாட்சிகளை கீழ்க்கண்டவாறு விசாரிக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் மேற்படி விலாசத்தில் வசிக்கிறேன். நான் BSNL அலுவலகத்தில் வேலை செய்கிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் 1, 2

எதிரிகளை தெரியும். எங்கள் வீட்டிற்கு பின்புறத்தில் குடியிருக்கிறார்கள். வழக்கில் இறந்து போன சூரியாவை தெரியும். அவர் எங்கள் பக்கத்து வீட்டை சேர்ந்தவர். அவர் எங்கள் வீட்டு வழியாக வந்து போவார். அப்போது பார்த்துள்ளேன்.

08.01.2019 ம் தேதி மாலை 5.00 மணியளவில் நான் என்னுடைய வீட்டில் வீட்டு வேலை பார்த்து வந்தேன். எங்கள் வீடு 256 எ, ராசிநகர், கொண்டசமுத்திரம், குடியாத்தத்தில் உள்ளது. என்னுடைய வீட்டிற்கு வெளியே யாரோ சண்டை போட்டு கத்துவதாக சத்தம் கேட்டது. எனவே நான் வீட்டிலிருந்து வெளியே வந்து பார்த்தேன்.

அப்போது எதிரிகள் இருவரும் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். எதிரிகள் வருவதற்கு முன்னர் அ.சா.1 சுமனும், இறந்து போன சூரியாவும் இருசக்கர வாகனத்தில் வந்து எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் நின்றுக் கொண்டிருந்தார்கள். 1ம் எதிரி ரமேஷ் ஒரு வெட்டுக் கத்தியை வைத்திருந்தார். அதை எடுத்து சூரியாவின் இடது பக்க தலையில் வெட்டினார். 1ம் எதிரி, சூரியாவை வெட்டியதை நான் பார்த்தேன். அப்போது 2ம் எதிரி, 1ம் எதிரி வைத்திருந்த கத்தியை வாங்கி சூரியாவின் இடது கால் தொடையில் வெட்டினார். 2ம் எதிரி இரண்டு தடவை சூரியாவின் தொடையில் வெட்டினார். பின்னர் 1ம் எதிரி ரமேஷ், 1ம் எதிரியிடம் கத்தியை வாங்கி சூரியாவின் வலது பக்க கன்னத்தில் ஒரு தடவை வெட்டினார். அப்போது நான் சூரியாவை, எதிரி வெட்டியவுடன் இரத்தம் வந்தது. அதை பார்த்தவுடன் எனக்கு மயக்கமாக இருந்ததால் வீட்டிற்கு வந்துவிட்டேன். பிறகு நான் 108

ஆம்புல்ன்ஸக்கு என்னுடைய கைப்பேசியில் இருந்து தகவல் கொடுத்தேன். சூரியாவிற்கு சம்பவ இடத்தில் உயிர் இருந்தது. பிறகு 108 ஆம்புல்ன்ஸ்வந்து குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள்.

குடியாத்தம் அரசு மருத்துவமனையில் முடியாது என்று வேலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக எனக்கு தகவல் தெரிந்தது. மறுநாள் சூரியா இறந்துவிட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. போலிசார் இரவு 9.30 மணிக்கு என் வீட்டிற்கு எதிரில் சம்பவ இடத்தில் வந்து விசாரித்தார்கள். போலிசார் சம்பவம் பற்றி கேட்டார்கள். நான் சொன்னேன்.

சூரியாவும், அ.சா.1 சுமனும் டி.வி.எஸ்.50 வண்டியில் வந்தார்கள். அந்த வண்டியின் எண்.5551. எதிரிகள் இருவரும் ஸ்கூட்டி வண்டியில் வந்தார்கள். எதிரிகள் வந்த வண்டியின் பதிவு எண்.4766. மேற்படி இரண்டு வண்டிகளும் நீதிமன்றத்தில் வழக்கு பொருளாக உள்ளதை சாட்சியிடம் காட்டி வினவியபோது அந்த சவண்டியில் தான் சாட்சி மற்றும் எதிரிகள் வந்ததாக சாட்சி கூறுகிறார்.

சம்பவத்தில் பயன்படுத்திய வெட்டுக்கத்தி சுமார் ஒரு முழம் இருப்பதாக சாட்சி தனது கையை காண்பித்து அடையாளம் காண்பித்தார். கத்தியின் பிடி கட்டை இருந்ததாக ஞாபகம். கத்தியின் பிடி முழங்கை நீட்டு இருக்கும் என தனது கையை காண்பித்து அடையாளம் காட்டினார். கத்தியின் இரும்பு பகதியின் நீளம் சுமார் முக்கால் அடிக்கு மேல் இருக்கும் என தனது கையை காண்பித்து

அடையாளம் காண்பித்தார். சா.பொ.4 கத்தியை சாட்சியிடம் காட்டி வினவியபோது எதிரிகள் இந்த கத்தியால் தான் சூரியாவை எதிரிகள் வெட்டியதாக கூறினார். வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரதித்தார்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

போலிஸ் விசாரணையில் நான் 2019ல் சென்னை திருநின்றஊரில் BSNLல் வேலை பார்த்தாக சொல்லி உள்ளேன். நான் தினசரி ரயிலில் பணிக்கு சென்றுவிட்டு, மீண்டும் வீட்டிற்கு வருவேன். எனக்கு மாலை 5 மணிக்கு தான் பணி முடியும். அவ்வாறு தினசரி வேலைநாட்களில் பணி முடித்துவிட்டு வீட்டிற்கு குடியாத்தம் வருவதற்கு இரவு 8.30 மணி ஆகும் என்றால் சரிதான். திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை எனக்கு வேலை நாட்கள்.

நான் சொன்ன சம்பவ தினமான 08.01.2019 செவ்வாய்கிழமை. போலிஸ் விசாரணையில் 08.01.2019 அன்று நான் பணியில் இருந்ததாகவோ அல்லது விடுப்பில் இருந்ததாகவோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார், என்னிடம் அவ்வாறு கேட்கவில்லை. அன்று நான் விடுமுறையில் இருந்தேன். நான் விடுமுறையில் இருந்ததாக போலிஸ் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் இருந்த பதட்டத்தில் போலிசார் என்னை விசாரித்தபோது சொன்னேன். அவர் என்னை விடுப்பில் இருந்தேனா என்று கேட்கவில்லை. நான் அவ்வாறு

சொல்லவில்லை என்றும் நீதிமன்றத்தில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் இறந்து போன சூரியாவையோ, எதிரி ரமேஷ்–ஐயோ நேரடியாக தெரியும். ஆனால் பழக்கம் இல்லை. ஆனால் எதிரிகள் இருவரும் என் வீட்டிற்கு பின்புறமாக குடியிருக்கிறார்கள். காயம்பட்ட சூரியாவும், எதிரிகளும் எனக்கு உறவுமுறை இல்லை. போலிசார் என்னை 9.30 மணிக்கு விசாரித்தபோது சம்பவ இடத்தில் சம்பவம் நடந்த போது பொது மக்கள் யாராவது இருந்தார்களா என்று சொல்லவில்லை. ஆனால் பொது ஜனங்கள் வந்து போக இருந்தார்கள். நான் குடியிருந்த பகுதி புதியதாக போடப்பட்ட மனையாகும். அதுகுடியிருப்பு பகுதியாகும். அந்த தெருவில் சில கடைகள் இருந்தன. சம்பவ காலத்தில் நான் குடியிருந்த பகுதியில் தங்கும் இடம் அடுக்குமாடி குடியிருப்பு இருக்குமா என்றால் இல்லை. சுமார் 20 வீடுகள் நான் வசித்த இடத்தில் இருந்தன. தொடர்ந்தாற் போல் இல்லை. அங்கு அங்கு வீடுகள் இருந்தன.

என்னுடைய முதல் விசாரணை மற்றும் போலிஸ் விசாரணையில் நான் 108 ஆம்புலன்ஸ்க்கு கைப்பேசி மூலம் தகவல் கொடுத்தேன். என்னுடைய கைப்பேசியில் கொடுக்கவில்லை. மற்றொருவர் கைப்பேசியை வாங்கி தகவல் கொடுத்தேன். போலிஸ் விசாரணையில் யாரிடம் கைப்பேசி வாங்கி 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் கொடுத்தேன் என்று சொல்லவில்லை. சூரியாவை குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு யார் அழைத்து சென்றார்கள் என்று எனக்கு தெரியாது.

போலிஸ் விசாரணையில் சூரியா எத்தனை மணிக்கு இறந்தார் என்றும், அவர் இறந்தது பொறுத்து யார் தகவல் சொன்னார்கள் என்று சொல்லவில்லை. போலிசார் என்னிடம் வாக்குமூலம் பதிந்த போது கையால் எழுதினார்கள். போலிசார் என்னை விசாரித்தபோது அ.சா.1 சுமனும் மற்ற சாட்சிகளும் இருந்தார்களா என்றால் இல்லை.

போலிசார் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்து விசாரிக்கவில்லை. சா.பொ.4 கத்தியை காவல் நிலையத்தில் போலிசார் காட்டி விசாரிக்கவில்லை என்றும், தற்போது நீதிமன்றத்தில் தான் பார்த்தேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் 3, 4 மீட்டர் தொலைவில் இருந்து பார்த்தேன். வெட்டுக்கத்தியின் அளவு, நீளம், நிறம் தன்மையை பற்றி போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் போலிசார் அவ்வாறு கேட்கவில்லை. எனவே சொல்லவில்லை.

நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும், அந்த சமயத்தில் நான் பணியில் இருந்தேன் என்றும், இரவு 9 மணிக்கு போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து போது தகவல் கேள்விப்பட்டு நான் வெளியே வந்தேன் என்றும், சம்பவத்தை பற்றி பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்த்து இருந்தால் நான் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்திருப்பேன் என்றும், சம்பவத்தை பார்க்காததால் தகவல் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் ஏற்கனவே இறந்துவிட்டார். அப்போது எனக்கு 2 குழந்தைகள் இருந்தது. மகனுக்கு 19 வயது, மகளுக்கு 17 வயது. இருந்த பதட்டத்தில் நான் குழந்தைகளை பார்த்துக் கொள்ளவேண்டியுள்ள

சூழ்நிலை இருந்தது. என்னுடைய பாதுகாப்பை கருதி நான் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கவில்லை. நான் பதட்டத்தில் இருந்தேன் என்பதை வழக்கிற்காக மிகைப்படுத்தி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சம்பவம் உண்மையில் நடந்து இருந்தால் என்னுடைய கைப்பேசியில் தகவல் கொடுத்திருப்பேன் என்றால், அதனால் தான் தகவல் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவ தினத்திற்கு மறுநாள் என்னுடைய மகன் சபரி மலைக்கு மாலை போடுவதாக இருந்தார். அதனால் நான் வீட்டை சுத்தம் செய்துக்கொண்டு வீட்டில் இருந்தேன். மேற்படி தகவலை என்னுடைய முதல் விசாரணை மற்றும் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரியை நீதிமன்றத்தில் தான் முதன்முதலில் பார்க்கிறேன் என்றாலும், அதற்கு முன்பு பார்த்ததில்லை என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

2ம் எதிரியின் வழக்கறிஞர் ஆஜராகாததால், 2ம் எதிரியே சாட்சியை குறுக்கு விசாரணை செய்கிறார். குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

என்னையும், முதல் எதிரியையும் எந்த விதத்தில் குற்வாளியாக சாட்சியம் அளிக்கிறீர் என்றால் நீங்கள் செய்த செயலை நான் பார்த்தேன் அதனால் சாட்சியம் அளிக்கிறேன். சம்பவ இடத்தில் நானும்,

1ம் எதிரியும் இருந்தோம் என்று எதை வைத்து சாட்சியம் அளிக்கிறீர் என்றால் சம்பவம் என் வீட்டு எதிரில் தான் நடந்தது. அதை வைத்து சாட்சியம் அளிக்கிறேன். என் வீட்டிற்கு பக்கத்தில் நிறைய வீடுகள் உள்ளன. சம்பவம் நடந்ததாக சொல்லும் நிலையில் அக்கம், பக்கம் உள்ளவர்களை நான் அழைத்து சொல்லவில்லை என்றால் சரிதான். காரணம் பக்கத்து வீட்டில் ஆட்கள் யாரும் இல்லை. அதை தள்ளி காலி மனைகள் இருந்தன.

சம்பவம் நடந்த நேரத்தில் இடத்தில் நிறைய பேர் இருந்தார்கள். அவர்கள் சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. என் வீட்டிற்கு எதிரில் சம்பவம் நடந்தது. அதை நான் பார்த்தேன். சம்பவம் நடந்த நேரத்தில் இடத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 10 பேருக்கு மேல் இருந்தார்கள். அத்தனை பேர்களும் சூரியாவை காப்பாற்றவேண்டும் என்று ஏதேனும் செயல்பட்டார்களா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

சம்பவத்தை நான் பார்த்த நிலையில் காயம்பட்ட நபரை காப்பாற்றவேண்டும் என்று தோன்றவில்லையா என்றால் எனக்கு பயமாக இருந்தது. எனவே நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை. சம்பவத்தை 10, 15 நபர்கள் பார்த்த நிலையில் ஏன் சூரியாவை அடித்த நபர்களை தடுக்கவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் பயந்துக்கொண்டு வீட்டிற்குள் இருந்தேன். சம்பவ தினத்தில் நான் வீட்டில் தான் இருந்தேன். அலுவலகத்திற்கு செல்லவில்லை.

சம்பவ தினத்தில் நான் விடுப்பு எடுக்கவில்லை என்றும், வேலைக்கு சென்றேன் என்றும், நான் விடுப்பு எடுத்ததற்கான எந்த ஒரு ஆதாரத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சரியாக எத்தனை மணிக்கு சம்பவம் நடந்தது என்றால் மாலை 5 மணிக்கு நடந்தது. போலிசார் இரவு 9 மணிக்கு என்னை விசாரணை செய்தார்கள். நான் சம்பவ தினத்தன்று வீட்டில் இல்லை என்றும், சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2024.12.16 19:12:31 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No. 14 of 2020
Prosecution Witness No.3 (L.W.3 )

| | | | |
|---|---|---|---|
| Name | : Mahendiran | Caste | :S.C. |
| Father's Name | : சத்தியமூர்த்தி | Calling | : வெல்டிங் |
| Village | : குடியாத்தம் | Religion | : இந்து |
| Taluk | : குடியாத்தம் | Age | : 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16.12.2024.

(Accused 1, 2 present)

எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி வழக்கறிஞர் திரு.அருண்குமார் ஆஜர். 2ம் எதிரி வழக்கறிஞர் திரு.மதன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. வழக்கு விசாரணைக்காக இன்று பட்டியல் இடப்பட்டது. அரசு தரப்பில் 6 சாட்சிகள் விசாரணைக்கு வந்துள்ளதாக சொன்னார்கள். வழக்கின் நடைமுறையில் சாட்சிகள் ஆஜரான நிலையில் எதிரிகளிடம், சாட்சிகளை விசாரிக்க போவதாக சொன்னதின் பேரில், 2ம் எதிரி ராஜா தன்னுடைய வழக்கறிஞர் ஆஜராகவில்லை என்று சொன்னார். சாட்சிகளை கீழ்க்கண்டவாறு விசாரிக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் மேற்படி விலாசத்தில் வசிக்கிறேன். நான் வெல்டிங் வேலை செய்கிறேன். ஆஜர் இரண்டு எதிரிகளையும் தெரியும்.

சம்பவத்திற்கு முன்பே இரண்டு எதிரிகளையும் தெரியும். எனக்கு வேலை கொடுத்த ஓனரின் பெயர் சௌந்தரபாண்டியன். அந்த சௌந்தரபாண்டியனின் மாமா தான் 2ம் எதிரி ராஜா. 2ம் எதிரியுடன், 1ம் எதிரி ரமேஷ் சம்பவ இடத்தில் இருந்தார். 2ம் எதிரியை ஏற்கனவே தெரியும். 1ம் எதிரியை சம்பவத்தின்போது தான் தெரியும். அ.சா.1 சுமன் எங்கள் பகுதியை சேர்ந்தவர். அ.சா.2 ஸ்ரீதேவியை சம்பவத்தன்று தான் பார்த்தேன். இறந்து போன சூரியாவை என்னுடைய பெரியப்பா மகன். எனக்கு அண்ணன் உறவு முறை.

08.01.2019 அன்று குடியாத்தம் காந்தி நகர், நியுபார்க் டவுனில் மதுஅருந்த நானும், ஸ்ரீகாந்தும் Bajaj Discover இருசக்கர வாகனத்தில் சென்றோம். அந்த ஒயின்ஷாப்பில் வழக்கில் இறந்து போன சூரியா மதுகுடித்துக் கொண்டு இருந்தார். நானும், ஸ்ரீகாந்தும் சூரியாவிடம் சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்தோம். அப்போது ஆஜர் 2 எதிரிகளும் அந்த இடத்திற்கு ஒயின் ஷாப்பிற்கு வந்தார்கள். 2ம் எதிரியின் மச்சான் என்னுடைய ஓனருக்கு ரூ.4000/- தரவேண்டும். அதைப்பற்றி என்னுடைய ஒன்னுவிட்ட அண்ணனான சூரியாவிடம் சொன்னேன்.

அந்த நேரத்தில் அ.சா.1 சுமனும் அந்த ஒயின் ஷாப்பிற்கு வந்தார்கள். அப்போது இறந்து போன சூரியா, 2ம் எதிரி ராஜா,. சௌந்தரபாண்டி உன் மாமா என்பதால் 2ம் எதிரியிடம் கேட்க சொன்னார். நானும், ஸ்ரீகாந்தும், சூரியாவும் எனக்கு வரவேண்டிய ரூ.4000/-த்தை என் மாமாவிடம் சொல்லி வாங்கி தரும்படி

சொன்னேன். அதற்கு 2ம் எதிரி தகாத வார்த்தைகளால் ங்கோத்தா, தேவிடியா பையா என்று பேசி என்னுடைய சட்டை பிடித்து யாரை பிடித்து வேலைக்கு சென்றாய் என்று என்னை அடிக்க வந்தார். நான் கோபமாக 2ம் எதிரியை ஒரு அடி அடித்துவிட்டேன். அப்போது அ.சா.1 சுமன் என்னை தடுத்து என்னை அழைத்து வந்துவிட்டார். அப்போது சுமார் மதியம் 1.30 மணி இருக்கும். அந்த நேரத்தில் நானும், சுமனும் மது அருந்தவில்லை. பிறகு எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். பின்னர் சிறிது நேரம் கழித்து நானும், ஸ்ரீகாந்த்தும் சேர்ந்து அதே ஒயின் ஷாப்பில் மதுகுடித்தோம். பின்னர் எதிரிகள் மீது சந்தேகப்பட்டு அவர்களை நானும், ஸ்ரீகாந்தும், Discover வண்டியில் பின்தொடர்ந்தோம். நானும், ஸ்ரீகாந்தும், செல்வராஜ் வீட்டிற்கு அருகில் சென்றபோது சுமார் 100 மீட்டர் தூரத்தில் எதிரிகள் இருவரும் சூரியாவை கத்தியால் வெட்டிக் கொண்டு இருந்ததை பார்த்தோம். நாங்கள் சத்தம் போட்டு கத்திக் கொண்டு சென்றோம். எங்களை பார்த்ததும் எதிரிகள் இருவரும் Scooty Zest வண்டியில் அங்கிருந்து கிளம்பி சென்றுவிட்டார்கள். வண்டியின் நெம்பர் ஞாபகம் இல்லை. சூரியாவிற்கு இடது பக்க தொடையில் இரண்டு காயம் இருந்தது. சூரியாவின் இடது பக்க கன்னத்திலும், இடது பக்க தலையிலும் காயம் இருந்தது. முகத்தில் இரத்த காயம் இருந்தது. தலையியல் இரத்த காயம் இருந்தது. சுமனை, எதிரிகள் அடித்து முள்ளின் மேல் தள்ளினார்கள். சுமன் அவராகவே எழுந்துவிட்டார். சூரியா மயக்கநிலையில் இருந்தார். எதிரிகளை, நானும், ஸ்ரீகாந்தும் அதே Discover வண்டியில்

துரத்தி சென்றோம். சிறிது நேரம் தான் சென்றோம். கொஞ்ச நேரத்தில் என்னுடைய வண்டி நின்று விட்டதால் தொடர்ந்து செல்ல இயலவில்லை. எதிரிகளை நாங்கள் துரத்தி சென்றதால் வண்டி நின்றதால் திரும்பவும் சம்பவ இடத்திற்கு வந்தோம். அ.சா.1 தான் அடிப்பட்ட சூரியாவை குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு முடியாது என்றவே வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பின்னர் சூரியா இறந்துவிட்டதாக தெரிந்துக் கொண்டேன். போலிசார் சம்பவ இடத்திற்கு இரவு 9 மணிக்கு மேல் வந்தார்கள். என்னை போலிசார் விசாரித்தார்கள். நான் பார்த்ததை சொன்னேன். இறந்து போன சூரியா வைத்திருந்த TVS XL Super TN–23–5551. அந்த எண்ணுக்கு இடையில் உள்ள ஆங்கில எழுத்து ஞாபகம் இல்லை. எதிரிகள் பயன்படுத்திய கத்தி வெட்டுக் கத்தி போல் தெரிந்தது. தொலைவில் இருந்து பார்த்ததால் கத்தியை பொறுத்து சரியாக அடையாளம் சொல்ல இயலாது. இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

2019 ல் நான் சென்னையில் வெல்டிங் வேலை பார்த்து வந்தேன். தற்போதும் சென்னையில் தான் வெல்டிங் வேலை பார்க்கிறேன். வேலை நாட்களில் போக மாத இறுதியில் என்னுடைய சொந்த ஊருக்கு வந்து செல்வேன். போலிஸ் விசாரணையில் சம்பவ இடத்திற்கு தகவல் தெரிந்து நான் சென்றேன் என்று சொல்லி

உள்ளேன். ஒயின் ஷாப்பிலிருந்து, சம்பவ இடம் சுமார் ½ கி.மீ. தூரம் இருக்கும். ஒயின் ஷாப்பில் attached bar உள்ளதா என்றால் பின்னால் ஒரு சைடிஷ் கடை ஒன்று உள்ளது.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தெருவின் அகலம் சுமார் 20 அடி இருக்கும். சம்பவ இடத்தை 100 மீட்டர் தூரத்தில் இருந்து நான் பார்த்தேன் என்று நான் சொன்னதை எந்த திசையில் இருந்து நான் வந்தேன் என்பதையும், சம்பவம் எந்த திசையில் நடந்தது என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. Discovery வண்டியில் போனதாக நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை. ஆனால் வண்டியில் போனதாக சொல்லி உள்ளேன். Discovery வண்டியின் பதிவு எண்ணையும் நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை.

மதியம் 1.30 மணிக்கு நாங்கள் மதுஅருந்திவிட்டு வெளியே சென்றுவிட்டு எத்தனை மணிக்கு திரும்ப சம்பவ இடம் வந்தோம் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் போலிசார் கேட்காததால் சொல்லவில்லை. நாங்கள் மது அருந்திவிட்டு எங்கு சென்றுவிட்டு சம்பவ இடத்திற்கு வந்தோம் என்பதை போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். போலிஸ் விசாரணையில் சூரியாவின் வண்டி எணணை பொறுத்து சொல்லவில்லை. சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்பதை குறிப்பிட்டு போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

சூரியா இறந்த செய்தி, சூரியாவின் தந்தை அ.சா.1 சுமனுக்கு சொல்லி சுமன் மூலம் எனக்கு தெரியும் என்று போலிஸ் விசாரணையில் சொல்லி உள்ளேன். செல்வராஜ் வீடு வடக்கு பார்த்தாற் போல் உள்ளது. அவர் இந்த வழக்கில் சாட்சி இல்லை. அ.சா.2 ஸ்ரீதேவியின் வீடு எந்த வண்ணத்தில் உள்ளது என்றால் இரவில் போலிஸ் வந்து விசாரித்தபோது வண்ணம் பற்றி சரியாக தெரியவில்லை.

நீதிமன்ற கேள்வி – சம்பவம் நேரம் மாலை 5 மணிக்கு சம்பவம் இடம் வந்தேன் என்ற நிலையில் ஸ்ரீதேவி வீட்டின் கலர் என்ன என்றால் ?

பதில் – சூரியா இரத்த வெள்ளத்தில் இருந்ததால் அதை பார்த்து எதிரியை துரத்தி சென்றேன். பதட்டத்தில் ஸ்ரீதேவியின் வீடு எந்த வண்ணத்தில் உள்ளது என்று கவனிக்கவில்லை.

போலிஸ் விசாரணையில், 1ம் எதிரி சம்பவ நேரத்தில் என்ன மாதிரியான வண்ணத்தில் உடை அணிந்தார் என்று சொல்லவில்லை என்றால் போலிசார் கேட்கவில்லை, எனவே சொல்லவில்லை. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், 1ம் எதிரி சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றும், சாட்சி ஸ்ரீதேவியின் வீட்டின் வண்ணத்தை பற்றி தெரியவில்லை என்றும், 1ம் எதிரி என்ன மாதிரியான உடை அணிந்திருந்தார் என்று சொல்லாததால் 1ம் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ நேரத்தில் என்னுடைய கைப்பேசியை எடுத்து செல்லவில்லை. வீட்டில் இருந்தது. ஸ்ரீகாந்தும் கைப்பேசியை ஒயின்ஷாப்பிற்கு எடுத்து

வரவில்லை. காரணம் செல்போன் வைத்திருந்தால் தொந்தரவு இருக்கும் என்பதால் எடுத்து வரவில்லை. சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையம் 2 கி.மீ. தூரம் இருக்கும். காவல் நிலையத்தில் சம்பவத்தை பற்றி தகவல் எதுவும் கொடுக்கவில்லை. நான் குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை. போலிஸ் விசாரணையிலும், முதல் விசாரணையிலும், 1ம் எதிரி சம்பவத்தில் ஈடுபட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி தானாக மேற்படி கேள்விக்கு கோபப்பட்டு, சம்பவத்திற்கு முன்பு இரண்டாம் எதிரி ராஜா கோபத்தில் அடித்ததாகவும், எனவே நான் ஏன் பொய் சாட்சியம் அளிக்கப்போகிறேன் என்று எடுத்துரைத்தார். போலிசார் சம்பவ இடத்தில் என்னை வாய்வழியாக விசாரித்தார்கள். நான் கையொப்பம் போடவில்லை. போலிசார் கைப்பட எழுதினார்களா என தெரியாது.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

2ம் எதிரி இந்த சாட்சியை தன்னால் குறுக்கு விசாரணை செய்ய இயலாது என்றும், வழக்கின் தன்மை குறித்து தெரியவில்லை என்றும் கூறினார்.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2024.12.16 19:12:39 +0530